DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.112/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாணிக்கம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராமகிருஷ்ணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.05.2026

2 ம் எதிரி ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்ளைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சோமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.5/2024, இதச பிரிவுகள் 294(பி),323,379 வழக்கு கோப்பை 15.02.2024 ம் தேதி அன்று எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் காயம்பட்ட நபர்களை 17.04.2024 ம் தேதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவர்.ராகுலவாணியை விசாரித்து சிறிய காயம் என்று காயச்சான்றிதழ் பெற்று அன்றைய தினமே குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து பதிவேட்டில் அ.சா.1ஐ கொண்டு வந்தவர் உறவினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1ன் சுவாசக்காற்றில் மது வாடை இருப்பதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் x-ray, scan எடுத்ததாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் மனு ரசீது எண்.23/2024 ஐ நீதிமன்றத்திற்கு இறுதி அறிக்கையுடன் அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய விசாரணையில் நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் ரூ.1200/-ஐயும் செல்போனையும் அரவிந்த் எடுத்துக்கொண்டதாக பதற்றத்தில் தவறுதலாக கொடுத்துவிட்டதாகவும் பணத்தை யாரும் எடுக்கவில்லை என்றும் திருச்செல்வம் போனை எடுத்துவந்து காவல் நிலையத்தில் கொடுத்ததாகவும் சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அ.சா.5 என்னிடம் கொடுத்த கோப்புகளை உரிய விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.